3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கடலூரிலும், பட்டுக்கோட்டையிலும் கல்வி நிறுவனங்களில் சொத்துவரிக்காக ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி நிறுவனங்களில் சொத்து வரிக்காக ஜப்தி செய்வது தொடர்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று கடலூரில் நடந்த நிகழ்வு பற்றி திரு. பி. ஆர்.எஸ். வெங்கடேசன், திரு. எஸ். பன்னீர்செல்வம், திரு. வி.கே. லட்சுமணன் ஆகியோரும், பட்டுக்கோட்டையில் நடந்த நிகழ்வு பற்றி திரு. ஆர். சிங்காரம் அவர்களும், என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த பிரச்சினையை ஏற்கனவே நான் விதி 55-ன் கீழ் அனுமதித்து இருந்தாலும், இப்போது ஜப்தி காரணமாக கல்வி நிறுவனங்களில் தேர்வு நடைபெறாமல் நின்றுவிட்டது என்ற ஒரு அவசிய அவசரத்தைக் குறிப்பிட்டிருக்கிற காரணத்தால், இதை ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பாக எழுப்ப நான் அனுமதித்து இருக்கிறேன். திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

முற்பகல் 11-20

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரிலே நகராட்சிக்கு உட்பட்ட பள்ளிகளில் சொத்து வரி ஜப்தி நடைபெறுவதன் காரணமாக, பெரிய பள்ளிகள், தனியார் பள்ளிகள் எல்லாம் சொத்து வரி கட்டாத நிலையில் இருக்கிற காரணத்தால், அரசாங்கம் ஜப்தி நடவடிக்கையை மேற்கொண்டது. இதனுடைய தொடர்ச்சியாக, நேற்றைய தினத்திலிருந்து தனியார் கல்லூரிகளையும் தனியார் பள்ளிகளையும் காலவரையறையின்றி கடலூர் நகரத்திலே மூடியிருக்கிறார்கள். இதனுடைய தொடர்ச்சியாக தமிழ்நாடு முழுவதும், இது பரவக்கூடிய வாய்ப்பு இருப்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இதே அவையிலே 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் தேதி அன்று, கேள்வி நேரத்தின்போது, மரியாதைக்குரிய சகோதரி மரியம் உல் ஆசியா அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே ஒரு கேள்வியைத் தொடுத்திருக்கிறார்கள். அதனுடைய பதில் உரையிலே, இதுபோன்ற கல்வி நிறுவனங்களுக்கு விதி விலக்கு அளிப்பதாக இங்கே பேரவையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய அனுமதியோடு டாக்டர் ஆரோக்கியசாமி மற்றும் சி. ஞானசேகரன் போன்றவர்கள் எல்லாம் துணைக் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் டிபார்ட்மென்ட் முன்னுக்குப் பின் முரணாக ஒரு ஜி.ஓ.வை அறிவித்திருக்கிறார்கள். அந்தக் குழப்பங்களின்

வாயிலாக அங்கே பள்ளிகள் இன்று காலவரையறையின்றி மூடப்பட்டு, 6 ஆம் வகுப்பிலிருந்து 9-வது வகுப்பு வரைபடிக்கின்ற மாணவர்கள் தேர்வு எழுத முடியாத நிலையிலே இருக்கிற முக்கியத்துவத்தை இந்த அவைக்குக் கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இது தமிழ்நாடு எங்கும் பரவாமல் இருக்க உடனடியாக அரசாங்கமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் இதிலே தலையிடவேண்டும் என்று வற்புறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டுக்கோட்டை பற்றி திரு. ஆர். சிங்காரம்.

முற்பகல் 11-25

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட, தனியாருக்குச் சொந்தமான 5 பள்ளிகளில்—கிறிஸ்டியன் ஸ்கூல்ஸ் மூன்றும், இந்து ஸ்கூல்ஸ் இரண்டும்—படித்த 6 ஆயிரம் மாணவர்கள் பரிட்சை எழுதிக் கொண்டிருக்கின்ற போது, முனிசிபல் நிர்வாகத்தில் இருக்கின்றவர்கள் திடீரென்று கதவைச் சாத்தி, இழுத்து மூடி, பூட்டி, சீல் வைத்திருக்கிறார்கள். இதனால், அந்தப் பள்ளி மாணவர்கள் பரிட்சை எழுத முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பெற்றோர்களும் மாணவர்களும் சேர்ந்து ஊர்வலம் ஒன்றை வைத்திருக்கிறார்கள். ஆகவே, பள்ளி நிறுவனங்களிலே இருந்து தனியாருடைய பிராப்பர்ட்டி டாக்ஸ், சொத்து வரியை. வசூலிப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், கல்வி நிறுவனங்களில் இதுபோன்று பள்ளித் தேர்வுகள் நடக்கின்ற போது மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.சுமார் 6,000 மாணவர்கள் பாதிப்பு என்று சொன்னால், 6000 குடும்பங்கள் இருக்கின்றன. 6,000 குடும்பங்கள் என்று சொன்னால், கிட்டத்தட்ட 30,000 மக்கள். ஆக 30 ஆயிரம் மக்களும் ஒரு தனியார் செய்த தவறினால் பாதிக்கப்பட்டு அந்த 30,000 மக்களும் இந்த அரசைத் திட்டுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆக யாரோ செய்த தவறுக்கு யார் மீதோ பழி சுமத்துகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பி. ஆர். எஸ். வெங்கடேசன் அவர்கள் சொன்னதுபோல பட்டுக்கோட்டையில் மட்டுமல்ல, கடலூரில் மட்டுமல்ல, இன்னும் பல இடங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் எல்லாம் இதுபோன்ற நிலை ஏற்பட்டதாக பலர் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இதில் தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, இதுபோன்று பள்ளிகளில் ஜப்தி நடவடிக்கையே கூடாது, அவர்களுடைய, தனியார் சொத்துக்களில் வேறு எந்த சொத்துக்கள் இருக்கின்றதோ, அதில் ஜப்தி நடவடிக்கை போன்று எடுத்து, அந்த வரி விதிப்பதற்கான சட்டத்திற்கு வழிவகை செய்யமுடியுமா என்று நான்

கேட்பதோடு, (குறுக்கீடு) - எலிமென்டரி ஸ்கூல் - மாணவர்கள் படிக்கின்ற பள்ளி என்பதால் அந்தப் பள்ளிகள் மீது போடப்பட்ட வரிகளைத் தள்ளுபடி செய்து இந்த அரசு உத்தரவு பிறப்பிக்கவேண்டும். ஏனென்றால் இந்த அவையிலே ஏதிர்க்கட்சியினுடைய தலைவியாக இருந்த நம்முடைய இன்றைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை அன்று அவமானப்படுத்தி வெளியே அனுப்பி மீண்டும் புரட்சித் தலைவியாக வந்து (மேசையைத்தட்டும் ஒலி) வெளியே அனுப்பியபிறகு சீல் வைக்கப் பட்டது போல் இருந்த சூழ்நிலையை மாற்றி, அந்த சீலை உடைத்து ஜனநாயக ரீதியாக சீலை உடைத்து, புரட்சி செய்த புரட்சித் தலைவியாக வீற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இதற்கு இன்றோடு முற்றுப்புள்ளி வைத்து, இந்த மாணவர்கள், பெற்றோர்கள் கலங்காமல் தைரியமாக பரிட்சை எழுதவேண்டும், அவர்கள் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்ற நிலையை நீங்கள் நிரந்தரமாக எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் அனைத்து தனியார் பள்ளிகளிலும் இது வரை பள்ளிக்கூடக் கட்டிடங்கள் என்று தனியாக வரி எதுவும் செலுத்தப்படுவதில்லை. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் அதாவது 1989-லே தனியார் பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் அரசுப் பள்ளிக் கட்டிடங்களுக்கு வரி விதிக்கவேண்டுமென்ற ஆணையை, நடவடிக்கையை மேற்கொண்டார்கள். இதில் ஏதோ டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி வந்து அமைத்ததற்குப் பின்னால் போடப்பட்ட வரி என்று தயைகூர்ந்து நீங்கள் எண்ணக்கூடாது. இந்த விளக்கத்தை நான் சொல்வதற்குக் காரணம், இது வரையிலும் தனியார் பள்ளிகளுக்கும் அரசுப் பள்ளிகளுக்கும் கட்டிட வரி, சொத்து வரி என்பதே இல்லாமல் இருந்த கால கட்டம். அதற்குப் பின்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இந்த வரி விதிக்கப்பட்டது. அதற்குப் பின்னிட்டு இது சம்பந்தமாக பல்வேறு பள்ளிகளிலிருந்தும் கோரிக்கைகள் பெறப்பட்டபோதும், இதை விளக்கவேண்டுமென்று சொன்னபிறகும், முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அவையிலே ஒரு விளக்கத்தை அளித்திருக்கிறார்கள், இது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும் என்று. அந்த அடிப்படையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இது சம்பந்தமாக ஒரு ஆய்வை மேற்கொண்டு, இன்றைக்கு ஒரு நல்ல முடிவை மேற்கொண்டு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு பி.ஆர்.எஸ். வெங்கடேசன் சொல்கின்றபோது முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அரசாணையிலே

கோளாறு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது இன்றைக்கு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே ஒரே ஒரு பிரச்சினைதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்த வரி விதிப்பை எப்படி திருத்தியமைக்கவேண்டும், தனியார் பள்ளிகளும், மற்ற அரசு பள்ளிகளும் பாதிக்காத வகையிலே எப்படி அந்த வரி விகிதம் இருக்கவேண்டுமென்ற அடிப்படையிலே அந்த ஆணை இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு பள்ளிகள் என்று சொல்கின்றபோது உண்மையிலேயே கட்டிடங்களுக்கு மட்டும் குறைந்த வீதத்திலே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. முந்தைய ஆட்சித் காலத்தில் கட்டிடங்கள், விளையாட்டுத் திடல்கள், ஓப்பன் ஸ்பேஸ்-காலி இடங்கள் அத்தனைக்கும் வரி விதிக்கப்பட்டிருந்தது. Open spaces also (Interruptions) Yes. Open spaces, play grounds and other properties, belonging to schools.. பில்டிங்ஸ் அல்லாததுகூட. இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு ஆய்வை மேற்கொண்டு, கட்டிடத்திற்கு மட்டும் குறைந்த அளவு வரி விதிப்பு போட்டால் போதும் என்ற அடிப்படையிலே இன்றைக்கு வரி விதிப்பு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியது போல் இன்றைக்கு பட்டுக்கோட்டையில் 28-3-1994 அன்று தலைமையாசிரியரைச் சந்தித்து அதிகாரிகள், நகராட்சி அதிகாரிகள் வரி விதிப்பு சம்பந்தமாக அந்த ஆணையைக் கொடுத்து வரியைக் கட்டச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாதமாகியும் - அதற்கு முன்பாகவே—மன்னிக்கவேண்டும், அந்த தேதியிலே சிறிது மாற்றம் இருக்கிறது.

முற்பகல் 11 -30

7 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டன. இங்குள்ள அத்தனை பேருக்கும் தெரியும். சாலை போட வேண்டும், குடிநீர் கொடுக்க வேண்டும். விளக்குகளை எரிய வைக்க வேண்டும் என்று சொன்னால் முறையான வருமானம் இல்லாமல் நகராட்சியாலே தன்னாட்சி நிறுவனத்தாலே எதுவும் செய்ய முடியாது. அந்தச் சூழ்நிலையிலேதான் ஒரு சிறு வரி விதிப்பு விதிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இன்றைக்கு அரசு, கட்டிடத்திற்கு மட்டும் வரி விதித்து இருக்கிறது. ஏதோ பள்ளிகளிலே தேர்வு நடக்கிறபோது மாணவர்களுக்கு இடையூறு செய்கிற வகையிலே ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று சொல்வது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. அப்படி நடக்கவும் இல்லை. அப்படிப்பட்ட குறிப்பு வரவில்லை. ஆக உண்மையிலேயே பள்ளிகளிலே மாணவர்கள் தேர்வு எழுதுகின்றபோது ஜப்தி நடவடிக்கை நடந்திருக்குமேயாகில் அரசு நிச்சயமாக அதை கவனத்தில் எடுத்து அதற்கு ஒரு நல்ல வழி வகுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. (குறுக்கீடு) இதிலே, கிளாரிபிகேஷன் அனுமதிப்பது இல்லை, கிளாரிபிகேஷன் வேண்டுமானால் 55-லே கொண்டு வரும் வரை காத்திருந்திருக்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல அந்தப் பள்ளிக்கூடங்களில் ஜப்தி நடவடிக்கைகள் நடைபெற்றனவா இல்லையா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினை என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு இதற்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நான் கேட்டிருக்கிறேன். அது மட்டும் அல்ல, கல்வி நிறுவனங்கள்மீது பிராப்பர்டி டாக்ஸ், விதிப்பது பற்றியே மறு பரிசீலனை செய்வதற்கு வருகிற 4 ஆம் தேதியன்று ஒரு கேபினேட் மீட்டிங்கைக் கூட்டச் சொல்லியிருக்கிறேன். அந்த கேபினேட் மீட்டிங்கின்போது இந்தப் பிரச்சினை முழுமையாக மறு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஆர். தங்கராஜ் (குறுக்கீடு) கிளாரிபிகேஷன் இல்லை. முதலமைச்சர் இப்போது சொன்னதற்குப் பிறகு கிளாரிபிகேஷன் என்ன இருக்கிறது. உட்காருங்கள், கிளாரிபிகேஷனுக்கு அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) கிளாரிபிகேஷன் கேட்க வேண்டுமென்றால் விதி 55-லே எடுக்கின்றவரைக்கும் பொறுத்திருந்திருக்க வேண்டும்

(ஆ) திருச்சி அரியலூர் வட்டம், திருமானூர் ஒன்றியம் கோயில்எசனை கிராமத்தில் ஜே.வி.விடி. திட்ட வீடுகள் இடிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். தங்கராஜ், திரு. சி. சுவாமிநாதன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டம், திருமானூர் ஒன்றியம் கோயில்எசனை கிராமத்தில், தமிழக அரசு ஆதிதிராவிடர்களுக்கு பட்டா வழங்கிய இடத்தில், ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எல்லாம் அங்கே இடிக்கப்பட்டிருப்பதாக ஒரு பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று அனுமதி கோரி உள்ளார்கள். திரு. தங்கராஜுக்கு, அனுமதி வழங்கி இருக்கிறேன். சுருக்கமாக அந்தப் பிரச்சினையைச் சொல்லக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருமானூர் ஒன்றியம் கோயில்எசனை கிராமத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிய போது ஜாதி இந்துக்கள் கலவரம் செய்து கட்டிய வீடுகளை இடித்து, இருந்த சிமென்ட் மூட்டைகளையும்,